ஹெக்டர் கொப்பேகடுவ
கமநல ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவகம்

ISSN : 1391 - 0426

நிலைத்திருக்கத்தக்க கமநல மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான புதிய அறிவை தோற்றுவித்தல்

# கமநலம்

மலர் : 33 | இதழ் : 1-2 | 2017 ஏப்ரல் - ஜீன் | விலை : ரூபா 80.00





நாட்பட்ட சிறுநீரக நோய் வறிய விவசாயிகளின் வாழ்வுக்கு அச்சுறுத்தலா?

## இலங்கையை அச்சுறுத்தும் தொற்றா நோய்களின் தாக்கம்








நலமான வாழ்க்கைக்கு நச்சுத்தன்மையற்ற விவசாயம்

சேதன விவசாய முறைமையும் நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களும்

மரபணு மாற்றப்பட்ட பயிர்களும் மனித ஆரோக்கியச் சீர்கேடுகளும்

ஆரோக்கியச் சீர்கேடுகள் ஏற்படுவதாகக் கூறப்படுவதால் உணவுப் பாதுகாப்புப் பிரச்சினைகள் எழுந்துள்ளன. மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் மற்றும் அவ்வாறு மாற்றம் செய்யப்படாத பொருட்களுக்கும் வேறுபாடு புலனாவதில்லை.

எனவே மரபணு மாற்றப் பொருட்களுக்கு தொழிற்குறியீடு வழங்க வேண்டும். ஒரு சில நாடுகளில் அவ்வாறான முத்திரையற்ற பண்டங்களை இறக்குமதி செய்வதிலும் தடை விதிக்கப்பட்டுள்ளன. அதிகரித்து வரும் சனத் தொகை வளர்ச்சிக்கேற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்கும் அதே வேளை மனித உயிர்களுக்கெதிரான பிரகடனமும் காணப்படுகிறது. வதிவிடங்களில் வீட்டுத்தோட்டம் செய்தல், பாரம்பரிய பயிர்களை நடுதல், சுகாதாரமான உணவு பழக்கவழக்கத்தினை ஊக்குவித்தல் போன்றவற்றினாலும் மரபணு மாற்ற மோகத்திலிருந்து விடுபடலாம். எமது ஆரோக்கியமான நீண்ட ஆயுளுக்கு மரபணு மாற்று பயிர்கள் தடை கற்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். கவர்ச்சிகளுக்கும் பொழிவிற்கும் ஏமாந்து விடாது எம்மை நாமே காப்பதே சிறந்த வழியாகும்.

இலங்கையை பொறுத்த வரையில் வெளிநாடுகளிலிருந்து மரக்கறி வகைகள் இறக்குமதி செய்ய வேண்டியதில்லை என நம் நாட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தெரிவித்துள்ளார். சில வேளைகளில் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்காக மரக்கறி வகைகள் இறக்குமதி செய்ய நேரிட்டால் சுற்றுலா ஹோட்டல்களுக்கு மட்டும் அவ்வாறு மரக்கறி வகைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதியளிக்க முடியும். வெளிநாட்டிலிருந்து மரக்கறிகள் இறக்குமதி செய்வதனை தடுக்கும் வகையில் எதிர்காலத்தில் சட்டங்கள் இயற்றப்படும். வெளிநாடுகளிலிருந்து மரக்கறி வகைகள் இறக்குமதி செய்யப்படுவதனால் உள்நாட்டு விவசாயிகளே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

மரக்கறி வகைகள் இறக்குமதி செய்யப்படுவதனை தடுத்தால் அந்நிய செலாவணியை சேமிக்க முடியும். மரக்கறி இறக்குமதியை வரையறுப்பதற்கு வர்த்தக, நிதி மற்றும் நுகர்வோர் அமைச்சுக்கள் கூட்டாக இணைந்து தீர்மானம் எடுக்க வேண்டும். விஷமற்ற உணவுப் பொருள் உற்பத்தியை கொண்ட நாடாக இலங்கையை மாற்றும் மூன்றாண்டு திட்டத்தை முன்னெடுக்கும் அலுவலகம் அரசியல் காரியாலயமன்று. இது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான சவால்களை வென்றெடுக்கும் தேசிய திட்டத்தை முன்னெடுக்கும் ஓர் பொறி முறைமையாகும். விஷமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது அவ்வளவு சுலபமானதல்ல என ஜனாதிபதி கூறியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.











உலகம் முழுவதும் இப்படிப்பட்ட மாற்றம் செய்யப்பட்ட பொருட்களை வித்தியாசப்படுத்தி காட்டிட எந்தவிதமான பிரத்தியேக நடவடிக்கையும் இல்லை. மரபணு மாற்றம் என்பது விஞ்ஞான உலகின் வியத்தகு சாதனைகளில் ஒன்று. இலாபம் மட்டுமே குறிக்கோளாக மட்டும் கொண்டு செயல்படும் பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளை முயற்சியை தடுத்திட இது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டியது கட்டாயம் தற்காலத்தின் அவசரத் தேவையாகவுள்ளது. எனவே ஒரு தேசத்தின் உணவுத் தன்னிறைவிற்கும் அமைதிக்கும் தனி மனித சுதந்திரத்திற்கும் குறியீடான முளை விதை பொருள் சொல்லி நிற்கட்டும்.

## உசாத்துணைகள்

ராமகிருட்டிணன் தி. (2009), மரபணுச் சூதாட்டம், கோயமுத்தூர், ஐரிஸ் பப்ளிகேசன்ஸ்

http://www.nanilam.com/?p=5782 (access: 2017.02.07 at 09.05 a.m)

http://keetru.com/index.php/2009-10-07-10-31-20/poovulagu-july14/28052-2015-03-17-07-14-58(access : 2017.02.07 at 09.10 a.m)

http://namnalam.blogspot.com/2014/02/blog-post.html(access : 2017.03.10 at 03.37 p.m)

http://mahesva.blogspot.உழஅ.2015/07/blog-post_31.html(access : 2017.04.12 at 10.06 a.m)

vhttps://sirippu.wordpress.com/2011/03/18/btbrinjal/(access : 2017.04.27 at 09.37 p.m)

**கலாநிதி. பரீனா றுஸைக்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

**எம். சீ. எப். ஜெசீரா**
**எம்.ஆர்.என். எப். பகர்வின்**
புவியியற்துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்.